" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2011-ம் ஆண்டு ஜீலை திங்கள் 11-ம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## சிறப்பு மாமன்றக்கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

திருக்குறள் : *"அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல் "*

பொருள் : தன் உயிர்போல் மன்னுயிரையும் போற்றி எல்லா உயிர்களிடத்தும் அருள் செய்வார்க்குத் தன் உயிர் அஞ்சவரும் தீய வினைகள் உண்டாகா.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால். இடைவிடாத. உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான். நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன், தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு. எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று. இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன், இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்,245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**<u>ம.தி. 1 / 19393 / 1999</u>**

1) மதுரை மாமன்றத் தீர்மானம் எண். 964, நாள். 09.09.2010 –ல் 17 உள்ளாட்சிகளை மதுரை மாநகராட்சியுடன் இணைக்க 09.09.2010–ம் நாளைய கடிதம் மூலம் அரசிற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டது.

2) மக்கள்தொகை, பரப்பளவு, வருமானம், தனிநபர் வருமானம், பரப்பளவு அடிப்படையிலான வருமானம், உட்கட்டமைப்பு வசதிகள், மேலாண்மை செய்ய இயலுகின்ற நில, நகரமயமாதல் விதி ஆகியவைகளின் அடிப்படையில் நன்கு ஆராயந்தும், அரசு மட்டத்தில் பல்வேறு ஆலோசனைக் கூட்டங்களில் கலந்தாலோசித்த பின்னரும், அரசாணை (நிலை) எண். 220, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 28.09.2010 ன் படி 17 உள்ளாட்சி மதுரை மாநகராட்சியுடன் இணைக்க அரசு ஆணையிட்டது.

3) மேலும் அரசாணை (நிலை) எண். 250, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 20.10.2010 ன் படி மதுரை மாநகராட்சியுடன் 17 உள்ளாட்சி அமைப்புகளை இணைப்பதற்கு ஆட்சேபணை கருத்துக்கள் தெரிவிப்பதற்கு பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து ஆறு வார காலம் அவகாசம்

வழங்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டு, தமிழ்நாடு அரசு அறிவிக்கை எண். 321, நாள். 20.10.2010 ன் படி அறிவிக்கை வெளியிடப்பட்டது.

4) அரசாணை (நிலை) எண். 10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 06.01.2011 ன் படி 1971–ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 3–ம் பிரிவின் (6)ம் உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் உள்ளாட்சி அமைப்புகளை மதுரை மாநகராட்சியில் இணைத்து ஆணை வெளியிடப்பட்டு, தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை எண். 10, நாள். 06.01.2011 ன் படி அறிவிக்கை வெளியிடப்பட்டது.

| வ. எண். | உள்ளாட்சி அமைப்புகளின் பெயர் | உள்ளாட்சியின் பரப்பிடம் முழுமையாக அல்லது பகுதியாக இணைக்கப்பட்டதா |
|---|---|---|
| 1. | ஆனையூர் நகராட்சி | முழுமையாக |
| 2. | அவனியாபுரம் நகராட்சி | முழுமையாக |
| 3. | திருப்பரங்குன்றம் நகராட்சி | முழுமையாக |
| 4. | உறார்விப்பட்டி பேரூராட்சி | முழுமையாக |
| 5. | திருநகர் பேரூராட்சி | முழுமையாக |
| 6. | விளாங்குடி பேரூராட்சி | முழுமையாக |
| 7. | மேலமடை கிராம ஊராட்சி | முழுமையாக |
| 8. | உத்தங்குடி கிராம ஊராட்சி | முழுமையாக |
| 9. | வண்டியூர் கிராம ஊராட்சி | முழுமையாக |
| 10. | கண்ணனேந்தல் கிராம ஊராட்சி | முழுமையாக |
| 11. | நாகனாகுளம் கிராம ஊராட்சி | முழுமையாக |
| 12. | திருப்பாலை கிராம ஊராட்சி | முழுமையாக |
| 13. | சின்ன அனுப்பானடி கிராம ஊராட்சி | முழுமையாக |
| 14. | சிந்தாமணி கிராம ஊராட்சி | முழுமையாக |
| 15. | ஐராவதநல்லூார் கிராம ஊராட்சி | முழுமையாக |
| 16. | புதுக்குளம் பிட் II கிராம ஊராட்சி | முழுமையாக |
| 17. | தியாகராஜர் காலனி கிராம ஊராட்சி | முழுமையாக |

5) இதன் படி விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள மதுரை மாநகராட்சியின் 2001ம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி மக்கள்தொகை 12.30 இலட்சங்கள், பரப்பளவு 147.997 ச.கி.மீ., மற்றும் ஆண்டு வருமானம் ரூ. 14470.34 இலட்சங்களாகும்.

6) மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 5(1), 49, 49(1) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வார்டுகளின் எண்ணிக்கை தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/2011 மூலமாக 72 வார்டுகளாக உள்ளதை 100 ஆக மாற்றியமைத்து சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது.

7) மக்கள்தொகை, பரப்பளவு மற்றும் வருமானம் அடிப்படையில் நகரமயமாதல் விதிகளின் படி உள்ளாட்சிகளை, வேகமாக நகரமயமாகும் பகுதிகள், மிதமாக நகரமயமாகும் பகுதிகள், மதுரை மாநகரை ஒட்டியுள்ள பகுதிகள் எனத் தரம் பிரித்து, அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட உள்ளாட்சிகளின் சராசரி மக்கள் தொகையைக் கணக்கிட்டு,

மக்கள்தொகை, பரப்பளவு மற்றும் வருமானம் அடிப்படையில் கணக்கிடும் பொழுது மதுரை மாநகராட்சிக்கு 75 வார்டுகள் எனவும், மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 17 உள்ளாட்சிகளுக்கு 25 வார்டுகள் எனவும் நிர்ணயிக்கும் படியாக வருகின்றது. இதன் படி தற்போது உள்ள மதுரை மாநகராட்சியின் 72 வார்டுகளை 75 வார்டுகளாக பிரிக்கும் பட்சத்தில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படும் என்பதால் மதுரை மாநகராட்சியின் 72 வார்டுகளை பிரிக்காமல் எஞ்சியுள்ள 17 உள்ளாட்சிகளுக்கான மொத்த வார்டுகள் 151 யை 28 ஆகவும் மறு சீரமைக்கப்பட்டுள்ளது.

8) அரசாணை (நிலை) எண். 91, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 28.06.2011 ன் படியும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 25120 /2011 /எம் 3, நாள். 01.07.2011ன் படியும் முனைவர் இரா. பழனிசாமி, இ.ஆ.ப., இணை ஆணையர் நகராட்சி நிர்வாகம், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களை மதுரை மாநகராட்சி எல்லை மறு சீரமைப்பு சிறப்புப் பணி அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

9) விரிவாக்கப்படும் மதுரை மாநகராட்சியின் உத்தேச வார்டுகள் எல்லை குறித்த விபரங்களை மாமன்றத்தில் வைத்து, மாமன்றத்தின் கருத்தைப் பெற்று 13.07.2011 க்குள் மறுசீரமைப்பிற்காக சிறப்புப் பணி அலுவலர் அவர்களுக்கு அனுப்ப வேண்டும் எனவும், அவ்வாறு பெறப்படும் கருத்துகள் மீது அரசு உரிய ஆணை பிறப்பிக்கும் எனவும், குறிப்பிட்ட காலவரையரைக்குள் கருத்துகள் ஏதும் பெறப்படவில்லை எனில் கருத்துகள் ஏதுமில்லையெனக் கருதி மேல்நடவடிக்கை தொடரப்படும் எனவும் இணை ஆணையர், நகராட்சி நிர்வாகம் மற்றும் சிறப்புப் பணி அலுவலர் (மதுரை மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு), நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை அவர்களின் ந.க.எண். சிறப்பு –1 / இ.ஆ.ந.நி. / 2011, நாள்.04.07.11–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருளில் குறிப்பிட்ட அரசாணைகள், தமிழ்நாடு அரசு அறிவிக்கைகள் சட்டத்திருத்த நகல், உத்தேச வார்டுகள் எல்லை குறித்த விபரப் பட்டியல்களின் நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது. எனவே விரிவாக்கப்படும் மதுரை மாநகராட்சியின் உத்தேச வார்டுகளின் எல்லைகள் குறித்த விபரங்களை மாமன்றம் பார்வையிட்டு கருத்தைத் தெரிவிக்கக் கோரும், இப்பொருள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

அ.கு. மாமன்றம் பரிசீலித்து கருத்துக்களை தெரிவிக்க தீர்மானிக்கலாம்.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.24</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

(ஒம்...)ஜி.தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : 11.07.2011

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2011-ம் ஆண்டு ஜீலை திங்கள் 11-ம் நாள் திங்கட்கிழமை காலை 12.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## <u>அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

**<u>1) E2/18141/11</u>**

மதுரை மாநகராட்சிக்கு ஒரு நகரப்பொறியாளர் பணியிடம் ரூ.12000-375-16500 என்ற சம்பள விகிதத்தில் அரசாணை எண்.237 நாள்:26.09.1996 ல் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இப்பணியிடத்தை நிரப்புவதற்கு தகுதியுள்ள பொறியாளர்கள் மதுரை மாநகராட்சியில் இல்லாத பட்சத்தில் அயற்பணி மூலமாக நிரப்ப முடியும் என பணிவிதி எண்.6-ல் கொடுக்கப்பட்டுள்ளது. (Tamilnadu Municipal Corporation Engineering and Water Supply Service Rule 1996)

மதுரை மாநகராட்சியில் நகரப்பொறியாளர் பணியிடம் அரசாணை எண்.44, நாள்:09.05.2006 மற்றும் அரசாணை (3டி) எண்.1 நாள்:12.01.2009 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை–ன் படி முறையே கண்காணிப்பு பொறியாளாராகவும், தலைமை பொறியாளாராகவும் நிலை உயர்த்தப்பட்டது. இப்பணியிடம் 1.1.2011 முதல் பணி ஓய்வின் காரணமாக காலியான காரணத்தினால் அரசாணை (ப) எண்.635 நாள்:31.12.2010, மற்றும் அரசாணை(ப) எண்.128 நாள்.28.02.2011 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கண்ட அரசாணைகளின்படி ஏற்படுத்தப்பட்ட தற்காலிக பணி ஒப்பந்தத்தில் பணியாற்றிய ஓய்வுபெற்ற தலைமைப்பொறியாளர் அவர்கள் 30.06.2011 அன்றிலிருந்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

மதுரை மாநகராட்சியில் நகரப்பொறியாளர் பணியிடம் இரண்டு முறை நிலை உயர்த்தப்பட்டு தலைமைப்பொறியாளர் பணியிடமாக மாற்றப்பட்டாலும் பணிவிதிகளுக்கு திருத்தங்கள்(Amendment to the Service Rule) கொண்டுவரப்படவில்லை. எனவே இப்பணியிடம் பணிவிதிகளில் தோற்றுவிக்கப்பட்ட நகரப்பொறியாளர் பணியிடமாக தொடர்ந்து இருக்கின்றது.

மேலும், அரசாணை (3டி) எண்.1 நாள்:12.01.2009 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) மதுரை மாநகராட்சி பணி விதிகளில் உள்ள நகரப்பொறியாளர் பணியிடத்தை தலைமை பொறியாளாராக நிலை உயர்த்தியதற்கு கீழ்கண்டவாறு காரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

“ மதுரை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.100.00 கோடி மதிப்பீடு கொண்ட பணிகள் எடுத்து கொள்ள வேண்டியதிருப்பதாலும் அப்பணிகளுக்கு தாமதமின்றி தொழில் நுட்ப அனுமதி வழங்க வேண்டியதிருப்பதாலும் கண்காணிப்பு பொறியாளர் நிலைக்கு உயர்த்தப்பட்ட நகரப்பொறியாளர் பதவியினை தலைமை பொறியாளர் பணியிடமாக நிலை உயர்த்தப்படுகிறது” என்று ஆணையிடப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது மதுரை மாநகராட்சியில் ரூ.100.00 கோடி மதிப்பீடு கொண்ட பணிகளோ அதற்கான தொழில் நுட்ப அனுமதியோ பெறப்படவேண்டிய நிலை இல்லை. எனவே நிலை உயர்த்தப்பட்ட பணியிடத்தை மீண்டும் பணிவிதிகளில் தோற்றுவிக்கப்பட்ட நகரப்பொறியாளர் பணியிடமாக தொடர்ந்து இருந்துவரவும் அப்பணியிடத்தில் மதுரை மாநகராட்சி பொறியியல் பிரிவில் செயற்பொறியாளர் பணியிடத்தில் பணிமூப்பில் உள்ள திரு.ஆ.மதுரம் செயற்பொறியாளர் அவர்களை நகரப்பொறியாளராக பணி உயர்வு வழங்குவதற்கு அரசின் உரிய ஆணை பெற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.25</u>**

**<u>பணிவிதிகளில் கொடுக்கப்பட்டுள்ள நகரப்பொறியாளர் பணியிடம் இருந்து வரவும், அப்பணியிடத்தில் பணிமூப்பில் உள்ள நிர்வாகப்பொறியாளர் திரு.ஆ.மதுரம் அவர்களுக்கு நகரப்பொறியாளர் பணியிடத்தில் பதவி உயர்வு வழங்க இம்மாமன்றம் ஏகமனதாக இத்தீர்மானத்தை நிறைவேற்றிட ஒப்புக்கொண்டு அரசுக்கு அனுப்பி வைக்கிறது.</u>**

**2) ம.ந.2/20037/2011**

மதுரை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் தற்பொழுது பொதுமக்களின் நலன் கருதி ஒரு ஆடு வதை செய்யுமிடம் (நவீன ஆடுவதை செய்யுமிடம், அனுப்பானடி) இயங்கி வருகின்றது. இந்நேர்வில், இந்திய அரசின் தணிக்கை துறை (Comptroller and Auditor General of India) 2008-2009ம் ஆண்டின் இம்மாநகராட்சி சிறப்பு தணிக்கையின் போது மாநகராட்சி சட்டம் பிரிவு 371ன் படி, போதுமான அளவு ஆடுவதை செய்யுமிடத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளதை மேற்கொள்காட்டியதுடன் பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் (2007 – 12) மதுரை மாநகராட்சியின் மக்கட்தொகை அடிப்படையில் (2001 – Census படி 11.09 லட்சம் மக்கள் தொகை) 2012-ம் ஆண்டிற்குள் 11 ஆடுவதை செய்யுமிடம் ஏற்படுத்தப்பட வேண்டும் என குறியீடு நிர்ணயித்திருப்பதுடன், 2007 – 2009ம் ஆண்டுக்குள் நான்கு (4) ஆடுவதை செய்யுமிடம் ஏற்படுத்திட வேண்டும் என தெரிவித்ததுடன் தற்பொழுது உள்ள 2 (1. அனுப்பானடி நவீன ஆடுவதை செய்யுமிடம், 2. மகபூப்பாளையம் மாடுவதை செய்யுமிடம்) மிகவும் பற்றாக்குறையாக உள்ளது எனவும், அதை மேற்பார்வை செய்யும் கால் நடை மருத்துவரும் (ஐந்து கால்நடை மருத்துவருக்கு பதிலாக ஒரு கால்நடை மருத்துவரே தற்பொழுது பணியில் உள்ளார்) பற்றாக்குறையாக உள்ளது என தெரிவித்து வருங்காலங்களில் மேற்படி குறைகள் சரி செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இந்திய தணிக்கை துறையின் அறிக்கையின் அடிப்படையிலும் இம்மாநகராட்சி மாமன்ற எதிர்கட்சி தலைவர் அவர்களின் கோரிக்கையின் பேரிலும் இம்மாநகராட்சிக்கு மேலும் நான்கு ஆடுவதை செய்யுமிடம்(1. அனுப்பானடி நவீன ஆடுவதை செய்யுமிடம் 2. மகபூப்பாளையம் மாடுவதை செய்யுமிடம் நீங்கலாக) அமைத்துக் கொள்வதற்கும், மாசுக்கட்டுபாட்டு வாரிய விதிமுறையின்படி, ஆடுவதை செய்யுமிடத்திற்குரிய ETP (Effluent Treatment Plant) அமைத்துக் கொள்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி கோருவதுடன், இந்திய தணிக்கை துறை சுட்டிக்காட்டியுள்ளபடி மேற்படி ஆடுவதை செய்யுமிடங்களை கண்காணிக்க மேலும் நான்கு கால்நடை மருத்துவர்களை நியமிப்பதற்கு அரசை கேட்டுக்கொள்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.26**

**உயர்நீதிமன்ற உத்திரவிற்கு பாதகமில்லாமல் நான்கு மண்டலங்களிலும் நவீன முறையில் ஆடுவதை செய்யும் கூடம் அமைக்கவும், ஏற்கனவே நெல்பேட்டையில் இயங்கி வரும் ஆடுவதை செய்யும் கூடத்தை நவீன முறையில் சுகாதாரத்துடன் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது**

**3) ம.நி.4/ 36673/2001**

மதுரை மாநகராட்சி மைய நிர்வாகப்பிரிவு ஆணையாளர் அவர்களின் இல்லத்தில் பணிபுரிந்து வரும் இரண்டு Texco காவலர்களுக்கு ஆணையாளரின் 26.05.2011–ந் தேதிய உத்தரவின்படி 01.10.2010 முதல் 30.09.2011 வரை பணியாற்றுவதற்கும் Texco நிறுவனத்திற்கு கட்டணப்பட்டியல் வழி செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

காவலர் மாதக் கட் டணம் ரூ.5582/- (8 மணி நேர வேலை) + சர்வீஸ் சார்ஜ் 12% + சர்வீஸ் டாக்ஸ் 10.3% எஜிகேசன் செஸ் விற்பனை வரி 2% + செகண்ட்ரி எஜிகேசன் செஸ் விற்பனை வரி 1% ஆக மொத்தம் ரூ.6896/-

**மாமன்றத்தீர்மானம் எண்.27**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**4) B4/15702/10**

மதுரை மாநகராட்சியில் 2009-10, 2010-11-ஆம் ஆண்டுக் கணக்குகள் முடிப்பதற்கு மண்டல அலுவலங்களிலும் உரிய பதிவேடுகள், வங்கி இணக்கச் சான்றுகள் மற்றும் இதரப் பட்டியல்கள் தயார் செய்வதற்கு அனுபவமிக்க பணியாளர்கள் இல்லாததால் மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கும் மாநில கணக்காயரால், (AG Audit) எழுப்பப்படும் தணிக்கை தடைகளை நீக்கம் செய்ய உரிய பதில் தயார் செய்வதற்கும் பணியாளர் குழு ஊதிய பரிவர்த்தனைகள், ஒய்வூதிய பலன்கள் அனுமதித்தல், வருவாய் இழப்புகளை கண்டறிந்து குறைகளை களைதல், நிர்வாக செலவினங்கள் முறைப்படுத்துதல், பதிவேடுகள் பராமரிப்பை முறைப்படுத்துதல், ஒய்வூதிய பிரேரணையில் எழும் குறைபாடுகளை அவ்வப்போது நிவர்த்தி செய்து ஆலோசனை வழங்க அனுபவமிக்க ஓய்வு பெற்ற தணிக்கை அலுவலரை ஒப்பந்த அடிப்படையில் ஆலோசராக அமர்த்தவும், அதற்கான மாதந்திர செலவினத் தொகை ரூ.10000/- வழங்கவும், அதனை ஓராண்டு காலத்திற்கு வைத்துக்கொள்ள கடந்த 30.07.2010-ல் நடைபெற்ற மாமன்றக்கூட்டத்தில் ஒப்புதல் பெற்று (மாமன்ற தீர்மானம் எண்.942/30.7.2010) அதன் பேரில் ஓய்வு பெற்ற தணிக்கை அலுவலர் திரு.சிவஜெயபால் அவர்கள் பணிபுரிந்து வருகிறார். அன்னாரின் பதவிக்காலம் தற்போது முடிவடையும் நிலையில் உள்ளதால், மேற்கண்ட பணியினை தொடர்ந்து செய்து வர அன்னாரை மேலும் ஓராண்டு காலத்திற்கு

பணி நீட்டிப்பு செய்யவும், அன்னார் தனது ஊதியத்தினை உயர்த்தி தர கடிதம் அளித்துள்ளதினை பரிசீலனை செய்து மாதந்திர ஊதிய தொகை ரூ.15000/- வழங்கவும், இதேபோல் கடந்த மாமன்ற தீர்மானம் எண்.369/30.04.2008-ன் பேரில் ஆலோசராக பணிபுரிந்து வரும் திரு.M.முருகேசன் அவர்களின் கடிதத்தினை பரிசீலனை செய்து மாதந்திர ஊதியத்தை ரூ.15000/- ஆக வழங்க வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.28**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**5) JNS5/33640/08**

ஜவஹர்லால் நேரு தேசீய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தில் நடைபெற்ற வரும் மழைநீர் வடிகால் திட்டம் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைக்கும் பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் ஆகிய திட்டங்கள் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் முடிக்க வேண்டிய நிலை உள்ளது. இதுவரை முடிவுற்ற பணிகளுக்கு பட்டியல் வழங்கப்பட வேண்டியுள்ளது. எனவே தற்காலிகமாக மத்திய அரசு மற்றும் மாநில அரசு நிதி பெறும் வரை பணிகளை தொடர்ந்து செய்ய TUFIDCO நிறுவனத்திடமிருந்து இடைகால கடனாக (Bridge loan) ரூ. 48.99 கோடி. வழங்க வேண்டி 27.6.2011 தேதியில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண் Roc No: 14159/2008/JNN1 நாள்: 2.7.2011–ம் தேதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.48.99 கோடி இக்கடனை பெறுவது தொடர்பான நடவடிக்கைக்கு இம்மாமன்ற அனுமதியும், மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு கீழ்கண்டவாறு அதிகாரம் வழங்கி மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. TUFIDCO நிறுவனம் வழங்கும் இடைக்கால கடன் தொகை ரூ.48.99 கோடியை பெற மதுரை மாநகராட்சி ஆணையாளருக்கு அனுமதி வழங்கிடவும்.
2. இக்கடன் தொகையை பெறுவதற்கு TUFIDCO உடன் ஒப்பந்தம் மற்றும் இதர ஆவணங்களில் ஒப்புதல் செய்யவும்.
3. மேற்கண்ட கடன் தொகை மற்றும் வட்டி தொகையை மத்திய, மாநில அரசு வழங்கும் தவணை தொகை வழங்கும் போது ஈடு செய்துக்கொள்ளவும்.
4. இத்திட்டத்திற்காக TUFIDCO மூலம் பெறப்பட்டுள்ள கடனுக்காக மற்ற பிற தொகைகளை வட்டி அசல் தொகை செலுத்துவதற்கு நிதிநிலை அறிக்கையில் உரிய ஒதுக்கீடுகள் செய்வதற்கும்.
5. மேற்கண்ட இசைவு கடனுக்காக அசல், வட்டி மற்றும் பிற தொகைகளை செலுத்த தவறும் பட்சத்தில் மதுரை மாநகராட்சிக்கு தமிழக அரசிடமிருந்து பெறப்படவுள்ள சமன்பாட்டு நிதி (Devolution) மானியம் மாநில திட்ட நிதிக் குழுவினர் பரிந்துரையின் பேரில் பெறப்படும் மானியம், முத்திரைத் தாள் பங்கு, மானிய வரி இணங்கள் ஆகியவைகள் மூலம் ஈடு செய்து கொள்வதற்கும் அனுமதி வழங்கவும்.

மேற்கண்ட நிபந்தணைகளுக்கு உட்பட்டு இடைக்கால கடன் தொகை ரூ. 48.99 கோடியை பெற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.29**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**(ஒம்..) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 11.07.2011.**

* * * * * * * *

# <u>மதுரை மாநகராட்சி</u>
## <u>மாமன்றக்கூட்டம்</u>
## <u>Table Agenda</u>

**<u>மதி1/18316/11</u>**

மதுரை மாநகராட்சி மேற்கு மண்டலம், வார்டு எண்.70 தேனி மெயின் ரோட்டில் சர்வே வார்டு எண்.XXIV பிளாக் 26 TS No.16-ல் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 26.50 m x 7.90 m (5.17 சென்ட்) அளவில் உள்ள காலியிடத்தினை மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டுவதற்காக நகராட்சி நிர்வாக ஆணையாளர் ஒப்புதல் பெற்று பொதுப்பணித்துறைக்கு ஒப்படைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.30</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**(ஒம்...)ஜி.தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 11.07.2011**